ஆயிற்று, அறுவடையும் முடிந்துவிட்டது. முருகையன் எதிர்பார்த்ததைவிடப் பல மடங்கு அதிக விளைச்சல் கிடைத்தது. வேண்டிக்கொண்டபடி விநாயகருக்கு மனம் குளிர அபிஷேகம் செய்வித்தான். ஏழைகளுக்கு அன்னதானமும் செய்தான்.

அடுத்த விதைப்புக்கும் ஆண்டு முழுவதும் தன் குடும்பத்துக்கும் போதுமான நெல்லை வைத்துக்கொண்டு மிகுதியை விற்றுவிடுவது அவன் வழக்கம். ஆனால் இந்த முறை மேலதிகமாகவும் சில நெல் மூட்டைகளை அவன் வைத்திருந்தான்.

நாளிதழ் உதிர்ந்தது. மாதங்கள் கருகின. ஆண்டொன்று வறண்டு உருண்டது.

அடுத்த விதைப்புக் காலமும் வந்துவிட்டது. ஆனால் வானம் வெளிறிக் கிடந்தது. மழையைக் காணவில்லை. எங்கும் வறட்சி, ஒரே வறட்சி, புல்பூண்டுகள் கருகிச் செத்தன. அகோர வெயிலால் மக்கள் அவதிப்பட்டனர்.

முருகையனால் வயலுக்குள் இறங்கவே முடியவில்லை. நிலமெல்லாம் இறுகி வைரம் பாய்ந்து வெடித்துக் கிடந்தது.

இந்த நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் இதே வறட்சிதான் என்று ஊரவர் பேசிக்கொண்டார்கள்.

பசி பட்டினி பஞ்சம்—பற்றுக்குறை— மரணம்—இவைபற்றிய பயங்கர நினைவுகள் மக்களை வாட்டி வறுத்தெடுத்தன.

ஆனால், குமரையன் மட்டும் குதூகலமாக இருந்தான். அவனுடைய உப்புப் பாத்திகள் பூத்துக் கிடந்தன. இத்தனை வருட வாழ்க்கையில் இப்படியொரு செழிப்பான விளைச்சலைக் காணவேயில்லை. அவை வெறும் உப்புப் பாத்திகள் அல்ல. உப்பு மலைகள்; பணக் குவியல்கள்.

ஊர் முழுவதும் பஞ்சத்தால் வாடிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தது. ஆனால் அதைப்பற்றி விசாரிக்கவோ, கவலைப்படவோ குமரையனுக்கு நேரமில்லை. உப்பு மலைகளை உடைப்பதிலும், மூட்டைகளாகக் கட்டி வீட்டிற்குள் பத்திரமாக அடுக்கி வைப்பதிலும் அவனுடைய பொழுது போய்க்கொண்டிருந்தது.

எந்தச் சக்தியாலும் எந்தக் கடவுளாலும்—அவன் இலட்சாதிபதியாவதைத் தடுக்க முடியாது; தடுக்கவே முடியாது.

அவனுடைய பிரச்சினைகள் எல்லாம் இனித் தீர்ந்துவிடும். பஞ்சம் அவனைக் கண்டு பறந்தோடிவிடும். நீண்ட காலமாக அவன் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தபடி, ஒரு காரும் அவனுக்குச் சொந்தமாகிவிடும். அவன் யாருக்குமே பணியாமல் தலைநிமிர்ந்து செல்லலாம்...

நாட்கள் சுழன்றன. ஆனால், குமரையன் எதிர்ப்பார்த்தபடி எதுவுமே நடக்கவில்லை. உப்பு மூட்டைகள் அப்படி அப்படியே கிடந்தன. ஒருநேரக் கஞ்சிக்கு மக்கள் ஆலாப் பறப்பதுபோல பறந்து கொண்டிருக்கும்போது இவ்வளவு பெருந்தொகையான உப்பைக் கொள்வனவு செய்ய யார் வரப்போகிறார்கள்!

நாளாக நாளாக அவனுடைய நம்பிக்கைக் கோட்டைகள் தகர்ந்து கொண்டே வந்தன. ஆசைக் கனவுகள் சிதறிக் கொண்டே வந்தன.

அரை வயிற்றுக்கும் கால் வயிற்றுக்கும் சாப்பிட்டுங்கூட அவன் வைத்திருந்த அரிசி விரைவிலேயே தீர்ந்துவிட்டது. அடுத்த வேலைச் சோற்றுக்கு என்ன செய்வதென்றே தெரியாத ஏக்க நிலை. இரண்டொரு தடவை பச்சைத் தண்ணீர் மட்டும் வயிற்றை நிறைத்தது.

ஊரில் உள்ள பலர் முருகையனைத் தேடி வந்தனர். தேவையும் தகுதியும் அறிந்து சிலருக்குக் கடனாகவும், சிலருக்குத் தானமாகவும் நெல் கொடுத்தான் முருகையன்.

ஆனால் முருகையனிடம் உதவி பெறுவதற்கு குமரையனின் தன்மானம் விடவில்லை. அது மட்டுமல்ல, தான் யாருடைய தயவையும் எதிர்பார்க்கவில்லை என்பதையும் அடிக்கடி வாய்விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தான் அவன்.

பிள்ளையார் கோவில்மணி கேட்கும்போதெல்லாம் அவனுடைய ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பும். தானும் தன் குடும்பமும் இங்கே பட்டினியால் செத்துக் கொண்டிருக்க அந்தக் கருங்கல்லின் மேல் பாலையும் தேனையும் ஊற்றி வீணாக்குகிறார்களே!

இந்த நிலையில், மழை பெய்ய வேண்டும் என்பதற்காக அந்த விநாயகருக்கு விசேட அபிஷேகமும் பொங்கலும் நடைபெறப் போவதையறிந்த போது அவன் எரிமலையானான். அன்னதானத்திற்குத் தேவையான உப்பை அவனிடம் நன்கொடையாக வாங்க வந்தவர்களை வாய்கொண்டமட்டும் திட்டித் தீர்த்தான்.

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# MACKIE STORES

**265, MAIN STREET**
**COLOMBO - 11.**

MAKERS OF THE FAMOUS STAG BRAND UMBRELLAS

---

**With Best Compliments**

**from**

# SRI MAIDHILY JEWELLERS

**( AIR CONDITIONED )**

**153, SEA STREET, COLOMBO 11**

Telephone : 549400

**★ SOVERIGN GOLD ★ MODERN STYLE ★ JUSTIFIABLE CHARGES**

**APPROVED BY THE GEM CORPORATION**

''உந்தக் கல்லுக்கு மேலே தண்ணீரை ஊத்திஞப்போலே மழை வந்துவிடுமோ? இந்த இருபதாம் நூற்ருண்டிலே இப்பிடி ஒரு மோட்டுத்தனமாக வேலையைச் செய்யிறதைக் கேள்விப்பட்டால் பிறநாட்டவர் எங்களைப்பற்றி என்ன நினைப்பினம்?''

''அவை என்ன நினைச்சாலும் எங்களுக்கென்ன? நாங்கள் ஏன் அதைப்பற்றிக் கவலேப்படவேண்டும்? நாங்கள் எல்லாரும் ஒருமனதாகக் கடவுளை வேண்டினுல் அவர் நிச்சயம் கண்திறப்பார் முந்தி இரண்டு மூன்றுமுறை கொடிய வறட்சி வந்தபோது நாங்கள் இப்படித்தானே செய்தம்? மழை பெய்ததுதானே?''

''சரி சரி. எதையாவது போய்ச்செய்து துலேயுங்கோ.... ஆனுல் என்னட்டை மட்டும் எந்த விதமான உதவிக்கும் வரவேண்டாம். எனக்கு உதில் நம்பிக்கையில்லே.....''

''ஊரிலேயுள்ள எல்லாரும் ஒருமனதாக ஒத்துச் செய்யிற காரியம் இது. நீ மட்டும் இப்பிடி எதிர்த்து நிக்கிறது அவ்வளவு நல்லாயில்லே அண்ணே.'' என்று சொல்லிக்கொண்டு போதியளவு உப்பைத் தாமாகவே எடுத்துக்கொண்டு விரைந்தார்கள் தண்டற்காரர்கள்.

குமரையனுற் பொறுக்க முடியவில்லே. அவனுடைய உப்பு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லே. ஒரு சதமேனும் வராவிட்டாலும் அவன் கவலேப்படப் போவதில்லே. ஆனுல் ஒரு சிறிய உப்புக் கட்டியென்ருலும் அந்தக் கோவிற் காரியத்திற்குப் பயன்படக்கூடாது. அதை அவன் தடுத்தே ஆகவேண்டும்.

தான் கோவிலுக்குச் செல்லப்போவதைச் சொல்வதற்காக மனைவியை அழைத்தபோதுதான் வேறெரு உண்மை அவனுக்குத் தெரிய வந்தது. அவனுடைய மனைவியோ மக்களோ வீட்டில் இல்லே!

அவர்களும் கோவிலுக்குத்தான் சென்றுவிட்டார்களோ?

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப் போன்றிருந்தது அவனுக்கு.

அவன் புறப்பட்டான். வெறுப்பு, வேதனை, ஆத்திரம், அவமானம், ஏக்கம், ஏமாற்றம்-எல்லாம் கலந்த ஓர் உருவமாக வீரேடும் வெறியோடும் புறப்பட்டான்.

மனத்தின் ஆவேசத்துக்கு ஈடுகொடுக்க அவனுடைய கால்களால் முடியவில்லே. இரண்டு நாட் பட்டினி வேறு, அவனைத் தள்ளாடித் தடுமாறச் செய்தது. எனுலும் ஒரு வித வைராக்கியத்துடன் அவன் கோவில் நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

கோவிலே அவன் அடைந்தபோது ஊர் முழுவதும் அங்கே திரண்டு நிற்பது தெரிந்தது. அனைவரும் அந்த விநாயகரை நோக்கிக் கைகூப்பியபடி நின்றனர். பலருடைய கண்களிலிருந்து கண்ணீர்ச் சொரிந்துக் கொண்டிருந்தது.

''கஷ்டப்படுபவர்களுக்குக் கண்ணீரைக் கொடுக்கத்தான் இந்தக் கல்லால் முடியும். வயலில் மழையைப் பெய்விக்க முடியுமா?''

ஒருவித ஏளனப் பார்வையுடன் அந்த மனிதக் கும்பலே நோக்கினுன் குமரையன்.

முன் வரிசையில், அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் பயபக்தியுடன் நின்றனர். மனைவியின் கையில் ஏன் ஒரு பாத்திரம்? கோவிற் பிரசாதத்துக்காகவா...? சீ!... யாருக்கு வேண்டும் இந்தப் பிச்சைச் சோறு...?

பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு அத்தனே பேருக்கும் மத்தியில் வைத்து அவளுக்கு அடித்தாற்ருன் அவனுடைய ஆத்திரம் தீரும்போலிருந்தது.

சிறிதும் தாமதியாமல் அவள்மேற் பாய்ந்தான் குமரையன். உரத்த குரலில் எதையோ கர்சித்தபடி கையை ஓங்கியவன், அடுத்த கணமே சுருண்டு விழுந்தான்...

''குமரையனைத் தூக்குங்கள்...''

''முகத்திலே தண்ணீர் தெளியுங்கள்... காற்றுப் படும்படி நன்ருக வீசுங்கள்.,...'' என்ற அனுதாபக் குரல்கள் எழுந்ததை அவன் கேட்கவில்லே. அனைவருமே அவனுக்காகப் பரிதாபப்பட்டதும் பரபரப்படைந்ததும், ஒவ்வொருவரும் அவனுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் என்று துடித்ததும் அவனுக்குத் தெரியாது.

நீண்ட நேரத்தின்பின் மயக்கம் நீங்கிச் சிறிது சிறிதாக உணர்வு திரும்பிய பொழுது, தன் மனைவியின் மடியில் தான் படுத்திருப்பதையும் கோவிற் பிரசாதத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தனக்கு முருகையன் ஊட்டிக் கொண்டிருப்பதையும், மிகுந்த அனுதாபத்துடனும் இரக்கத்துடனும் மற்றையோர் தன்னைப் பார்த்துக்கொண்டிருப்பதையும் உணர்ந்தான் குமரையன்.

*WITH BEST WISHES*

**Cross - Point Communication Service**

International Telephone & Telex Bureau
( OPEN 24 HOURS )

**301, Galle Road, Kollupitiya, Colombo - 3.**

Telex : 22082 X POINT CE
22291

Telephone : 575162 - 575164 - 575599
FASCIMILE : 575599

---

**WITH BEST COMPLIMENTS**

**Cargo Boat Company Limited**

**SHIPPING AGENTS**

**66, VIVEKANANDA HILL, COLOMBO 13**

PHONE : 22241/35322
547860/548088
NIGHT : 589246/31768

CABLE : GLOMARIN
TELEX : 21835 TXBURO CE
21897 TXBURO CE

''முருகையாண்ணை, இண்டைக்குக் குமரையாண்ணையின்ரை உப்புமட்டும் வந்திரா விட்டால், உங்களின்ரை அரிசியாலும் அவ்வளவு பிரயோசனம் இருந்திருக்காது'' என்று யாரோ சொல்லிக்கொண்டிருந்தது குமரையனுக்குத் தெளிவாகவே கேட்டது

மின்வெட்டினாற் போன்றிருந்தது அவனுக்கு! போன தடவை அவனுடைய வயிற்றெரிச்சலைக் கிளறிக்கொண்டு பெய்த மழையினால் விளைந்த அரிசிதானா இன்று அவனுக்கு உயிரளித்துக் கொண்டிருக்கின்றது? முருகையனுடைய அதே அரிசியுடன்தானா அவனுடைய உப்பும் இரண்டறக் கலந்திருக்கின்றது?

அவன் பேராசைப்பட்டதைப் போல், நெற்பயிர்கள் எல்லாம் கருகிச் சாக, உப்பு மட்டும் விளைந்திருந்தால் ..? இப்போது அவனுடைய கதி...?''

''விக்கினேஸ்வரா.. விநாயகா .''

பேருண்மை ஒன்றைப் புரிந்துகொண்ட பேரானந்தத்தில் அவனறியாமலே அவன் வாய் கூவியது.

''அரோகரா. பிள்ளையாருக்கரோகரா...'' கூடிநின்ற மக்களும் கூவினர். கூத்தாடிக் கும்பிட்டனர்.

வெளியே மழைத்துளிகள் சடசடத்தன.

கடவுள் கண்திறந்துவிட்டார் என்ற மகிழ்ச்சியுடன் மீ டும் விநாயகரை நோக்கி அனைவரும் கைகூப்பினர். குமரையனும் தன்னை மறந்து, எழுந்து நின்று கும்பிட்டான்.

ஆனால். விநாயகர் மட்டும் ஆழக் கடலின் அமைதியுடன் அனைத்தையும் அறிந்துக் கொண்டுள்ள நிறைவுடன், அனுதினமும் கடைப்பிடிக்கும் தெய்வீக மௌனத்துடன் ஆடாமல் அசையாமல் அழகொழுக அங்கே வீற்றிருந்தார்.

நன்றி - வளர்மதி

++++++++++++++++++++++++

# என்ன தவம் செய்தோமடி!

அன்னை பராசக்தி அகிலமெல்லாம் நீ நிறைந்தாய்
நாடும் நம்மவர்க்கு நயந்து வரமும் அளித்திடுவாய்
வீணைதனைக் கொஞ்சி வெண்டாமரையில் வீற்றிருந்து
புன்னகையால் ஆயிரம் புதுக்கலைகள் படைத்திடுவாய்
புதுமலராள் உனைவணங்க நாம் என்ன தவம்
செய்தோமடீ!

வீணையுடன் வீற்றிருந்து நல்லேடு கையில் கொண்டு
செங்கமலத் தமிழ்ச்சங்கம் நாற்றிசையும் பரவிட
சித்தியும் புத்தியும் வித்தையும் பல தந்தருளி
இங்கிதமாய் கலைமகள் நினக்கு முடிசூட வரமீந்த
பூரணியாள் உனைவணங்க என்ன தவம்
செய்தோமடீ!

கல்வியும் கலைப்பண்பும் ஞானமும் பலசுந்தாய்
அன்புடன் உன் முன் பணிந்த நன் மாணுக்கர்—அவர்
உள்ளத்தை உய்வித்து உன்னதமாக்கி—அனலும்
புனலும் அழித்திட கலைகள் அறுபத்து நான்கினையும்
உணர்வித்த உத்தமியாள் உனைவணங்க நாம் என்ன தவம்
செய்தோமடீ!

நா. விக்னேஷ்

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# Interocean Shipping & Trading Co. Ltd.

EXPORTERS & IMPORTERS

# Interocean Travels Ltd.

TRAVELS & TOUR OPERATORS

**Agent :**

Maldivian Govt, Department of Tourism
State Trading Organisation, Male.
Republic of Maldives.

**Publicity and Consultancy Division :**

Recruitment and Manpower Service (Foreign & Local)
Real Estate Brokerage Business Management
Publicity Advertising & Marketing Services

Address :
**676, Galle Road,**
**COLOMBO 3.**

Telephone : 580062 / 580063
Cable : OCEANCARS
Telex : 21129 A/B INTOCEN

# OF RELIGION, SCIENCE AND OUR LIVING PLANET

"We are sitting on a time bomb." this was how a leading scientist described the present state of the world. He was ofcourse, referring to the deployment of nuclear arsenals. Many people tend to blame the advancement of science and technology for many of the problems which are threatening to destroy mankind and our living planet together. But is science really to blame?

If one take a look back into history, one finds an endless list of wars in which millions of lives have been lost. It is also obvious that there has been a gradual advancement in the methods of warfare and in the arms used. It has to be accepted that this advancement has been the effect of scientific development But it has to be noted that this refers only to the physical aspect of warfare. This is of course directly aligned to man's understanding of the physical universe.

At this point, we must ask ourselves as to why wars start in the first place The mere fact of there being sophisticated arms, does not necessitate warfare. Here we are dealing with the mental aspect of warfare. Men are warring amongst themselves, because of power, supremacy and conflicting opinions.

Hence it becomes clear that the main cause for wars is the insufficient development of man's spiritual and mental self. Science is fast developing man's physical knowledge of the universe What is needed is an equally fast development of his spiritual and mental self.

This is exactly where the importance of religion in the modern world comes to light. Negative qualities such as jealousy, hatred, selfishness and acquisitiveness have to be done away with; love happiness, brotherhood and satisfaction (contention) have to fill the world.

Let us now take a look into some of the problems faced by the world, and see as to how religion and science together could solve them.

First of all the world food problem. Scientists have estimated that the world can feed up-to 45 billion human beings without endangering any other living species. At present the world population is only 6 billion. Even so 4 billion humans are suffering from malnutrition and hunger. What's wrong and where's the problem? Millions of tonnes of food are dumped into the sea every year by the developed countries with the intention of maintaining the high prices of food for their own selfish benefits. Even the food aid given to the developing nations only helps to increase the dependence of these nations on the super powers. Thus a radical change is needed in production and marketing of food to overcome this problem. The third world nations should be helped to become self-sufficient in food by making use of the scientific knowledge to improve production methods and to obtain higher yields. This ofcourse requires a sense of unity, sharing, and brotherhood and necessitates a "mankind is one' feeling. Thus religion can play a big role in introducing such an atmosphere.

# LOANS

**for**

**Small & Medium Industries under the SMI Project**

UP TO

# RS. 4. MILLION

*AT AN ANNUAL INTEREST RATE OF*

14% with

- ☐ **A comfortable repayment period and**
- ☐ **A suitable grace period**

*CONTACT ANY BRACH/REGIONAL OFFICE OF THE*

★ BANK OF CEYLON ★ PEOPLE'S BANK

★ COMMERCIAL BANK OF CEYLON LTD. ★ HATTON NATIONAL BANK LTD.

★ DEVELOPMENT FINANCE CORPORATION OF CEYLON

**Tihs Loan Scheme Is Launched In Collaboration with the**

**NATIONAL DEVELOPMENT BANK OF SRI LANKA**

P O.BOX 1825, 6th FLOOR, CEYLINCO HOUSE. COLOMBO 1.

Next., let us turn our minds to the problem of terrorism. Here it would be appropriate to quote the immortal Mahatma Gandhi. "The good intentions and the good ambitions of an action are by themselves not sufficient to justify such an action. It is also necessary that the path of action taken be a good and correct one"

It should be noted that in many parts of the world, terrorism originated from religious (or at least partly religious) objectives. When a religion speaks of peace and non-violence, the use of violence to acheive its objectives is by itself deplorable, and essentially contradictory to its own fundamental principles.

It has to be appreciated that the world is a place for all men to live in unity and harmony, without undergoing nature's delicate balance. This is where we come again to the problem of nuclear arms. Nuclear science has developed into one of the most useful and important studies in modern science. It has become clear the nuclear energy can on its own, when used carefully and intelligently, solve the energy crisis for posterity without endangering any life, nor causing pollution of any kind. On the other hand it has also become clear that nuclear energy when used without care, can bring doomsday very much closer than it really should be !

As stated before, the development of man's mental and spiritual world is a "sine quoi non" without which, there can never be peace in any part of this living planet

Let us next consider some reforms that have to be made in religion and society. First the study of religion in schools. What has to be stressed is that God is one and that to reach him there are many ways just as there are in any paths to the top of the hill. Since all religions speak of one and the same supreme being all religions have to be placed on an equal footing and should be respected equally.

As for as we know our planet is the only one in the universe which contains what we know as life. When we think of the enthralling nature of our earth, its mystic mountains, the lush green fields, the vast mysterious seas, the dancing water falls, the undulating streams, and rivers, the thick forests and beautiful flowers, not forgetting the vast number of animals that inhabit it, we should consider ourselves lucky to be able to live in such an environment. The earth is such a vast place that there is plenty of room for all of us, Thus there should be no reason, for wars and any kind of discriminition Echoeing what was stated before, religion will help us live a peacefull life.

Lef us discuss some of the important aspects of the way of life professed by all the religions. First simplicity :- All the religions, speak living simple lives. There is a lot of truth in this considering the longterm welfare of man. What man should not forget is that, he too is an animal, that he too has a lot in common with all the other life, found on this planet Since the natural environment is what suits him it is imperitive for him to live alongside nature. He should never try to drastically change his environment. He has already attempted, to accomplish this through the introduction of the modern society of consumption and he has had to face, up to its dire consequences. Therefore what he needs to is to use scientific knowledge in a manner in which nature would help his progress rather than consider it as a barrier to his development. He should refrain from being avaricious after all. What can he take out of this world when his bids 'adieu' to it? This a simple life is most suitable.

Obviously, the concept of a simple life, would also do away with power selfishness, thus removing roots which spring wars, paving the way for a peaeeful life. Auto matically, it will induce showing and brotherhood and equity among man

All in all material life becomes useless I am not refe'ring here to solitude. What I am trying to put across in a life where one lives to enjoy life rather than to live to accumulate meterial wealth. Of course, some amount of material is needed to continue living but it should not to be the overiding criterion of one's life.

Thus, it should be crystal clear that science and religion together can bring about a way of life which would ensure peace and prosperity to the whole world. With that common end in mind let all of us work honestly and sincerely towards a happy and contented society.

Living on this planet is indeed a facinating experience. One does not need luxuries or wealth to experience happiness in this paradise. The only requisite is a bit of commonsense . . .

**S. S. Mohan**
**13 L**

PLEASE

PATRONISE

OUR

ADVERTISERS



# A helping hand to foster the Arts...

Ceylon Tobacco Company Limited

*MIDDLE PAGE ADVERTISEMENT :*

**GLAXOSE-D**

**for**

**INSTANT ENERGY**

**WITH BEST COMPLIMENTS**

**OF**

***Glaxo***

**GLAXO CEYLON LIMITED**

**P. O. BOX 1653**

**COLOMBO.**

*MIDDLE PAGE ADVERTISEMENT :*

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# STEELMENS (PVT) LIMITED

**459, OLD MOOR STREET,**
**COLOMBO - 12.**

**Telephone ; 22779**

**FOR QUALITY STEELS, HARDWARES**
**AND B M C PRODUCTS**

*MIDDLE PAGE ADVERTISTMENT*

WHERE YOU SEE OBSTACLES
WE MAY SEE PATHS......

*SOLVE*
YOUR LIQUIDITY PROBLEMS WITH THE HELP OF

# SHABRA UNICO FINANCE LIMITED

YOUR FRIENDS IN FINANCE

FOR :

**Hire purchase financing and leasing of vehicles.**
**Trade and Import Loans.**
**Pledge loans.**
**Mortgage loans.**

*CALL ON US*

**SHABRA UNICO FINANCE LIMITED**

**61, NEW BULLERS ROAD,**
**COLOMBO 4.**
TELEPHONE : **589310, 500576**
T.GRAMS : **Unishab**

A STABLE FRIEND IN A CHANGING ECONOMY

ROYAL COLLEGE HINDU STUDENTS' UNION

*MIDDLE PAGE ADVERTISEMENT*

**WITH BEST COMPLIMENTS**

**OF**

# TRUST GROUP OF COMPANIES

**HIDRAMANI ARCADE,**


**65, Chatham Street,**

**Colombo-1.**

T.PHONE : **548409, 540283-6** ( 4 lines)
TELEX : **22238** TRUST CE.

ROYAL COLLEGE HINDU STUDENTS' UNION

# ROYAL COLLEGE HINDU STUDENTS' UNION
## ( 1985/86 )



Seated from Left to Right

Miss. S. Chelliah (*Senior Teacher-in-charge*), S. Lingan (*Secretary*), V. Y. Sabaratnam (*Student Chairman*); Mr. C. T. M. Fernando (*Principal*), S. Sathiendra (*Secretary*). S. Sharavanan (*Chief Editor*). Mrs. Rajkumar (*Teacher-in-charge*).

Standing from Left to Right

N. Viknesh, K. Sivakumar, T. Nilavolikanthan, S. Sathiendran, B. Aravindhan, R. Ravindran, V. Devadas, S. Vytheswaran, K. Pradeeban.

# உங்களுக்குத் தெரியுமா?

1. இலங்கையில் பாடல் பெற்ற தலங்கள் இரண்டின் பெயர் கூறுக.
2. இலங்கையில் இருநாயன்மாரால் பாடப்பெற்ற ஒருதலம் எது? பாடிய இருவரும் யார்?
3. சமய குரவர் நால்வர் யார்?
4. தேவாரங்கள் பாடிய மூவர் யாவர்?
5. இலங்கையில் பெயர்பெற்ற சிவஸ்தலங்கள் ஐந்து எவை?
6. இலங்கையில் எல்லா மதத்தவருக்கும் பொதுவான யாத்திரை தலங்கள் இரண்டு எவை?
7. கடந்த நூற்றுண்டில் வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய யாழ்பாணத்துப் பெரியார் யார்?
8. யாழ்ப்பாணத்தில் உள்ள 3 விஷ்ணு ஆலயங்கள் எவை?
9. ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்பதில் 'நாலும் இரண்டும்' என்று குறிப்பிடப்படுபவை யாவை?
10. சுந்தர மூர்த்தி நாயனர் முதலில் பாடிய பாடலின் தொடக்கம் என்ன?
11. சிவசின்னங்கள் எவை?
12. பஞ்சாக்ஷர மந்திரத்தை எழுதுக. ஷடாட்சர மந்திரத்தை எழுதுக.
13. ஆறுபடை வீடுகளும் எவை?
14. முருகன் திருநாமங்கள் ஆறு கூறுக.
15. முருகப் பெருமானின் 3 சக்திகளும் எவை?
16. நவராத்திரி காலங்களில் பராசக்தியின் எந்த மூன்று வடிவங்களுக்கு விழா எடுக்கப் படுகிறது?
17. இந்து மதத்தின் ஆறு பிரிவுகளும் எவை?
18. முதன் முதலில் மேலை நாட்டில் இந்து மதத்தின் சிறப்பைப் பரப்பிய இந்தியத் துறவி யார்? அவரின் பிள்ளைத் திருநாமம் என்ன?
19. இராவண சம்ஹரத்தின் பின் இராம பிரான் ஸ்தாபித்துப் பூஜித்த ஐந்து ஈஸ்வரன் கோவில்கள் எவை?
20. பஞ்ச புராணங்கள் எவை?

விடை:-- இறுதிப்பக்கம்

*WITH THE BEST COMPLIMENTS*

*OF*

# DEENAM FASHIONS LTD.

**245 2/1, KUBRA BUILDING**
**GALLE ROAD,**
**COLOMBO-4**

மேற்பிரிவில் முதல் பரிசு பெற்ற கட்டுரை:

# உள்ளத்தைச் சுருக்கி உலகத்தை அளந்த மதம் இந்து மதம்

விந்தை மிகு விஞ்ஞான யுகமிது. சடப் பொருளின் தன்மையறிந்து அதைத் தனக்கேற்றபடி பயன்படுத்திக் கொண்டு விட்டான் மனிதன். விஞ்ஞானம் எனும் அறிவின் துணைக்கொண்டு இம் மாபெரும் சாதனையைப் புரிந்து விட்டான். ஆனால் உலகின் புற இயல்புகளை அறிந்த மனிதன் புறத்தை ஊடுருவி அதன் பின்னே கிடக்கும் அதன் அக இயல்புகளைக் காணத் தவறிவிட்டான். மனிதன் காணத் தவறிய இவ்வக இயல்புகளைத் தெள்ளத்தெளிவாகக் கூறி நிற்கிறது கல்ப கல்பாந்தரத் தொன்மை வாய்ந்த இந்துமதம்.

இன்றைய விஞ்ஞானம் மனிதனுக்குப் பல இந்திரிய சுகங்களை ஏராளமாக அளித்திருக்கின்றது. அவற்றில் மூழ்கிப் போகும் மனிதன் 'மனம் போன போக்கிலே' வாழ முடிவு செய்து விட்டான். அந்த மனத்தினை அடக்கி அதன் மாபெரும் சக்தியை உணரத் தவறிவிட்டான்.

மனம் என்றால் என்ன? அதற்கும் உடலுக்கும் உள்ள தொடர்புதான் என்ன?

இன்றைய விஞ்ஞானம் இதற்கு விடைகாண முடியாது தவிக்கின்றது. ஆனால் இந்து மதமோ என்றோ இவையனைத்திற்கும் விடை பகர்ந்து விட்டது.

''உடலென்பதோர் குதிரை வண்டி. அதில் ஆத்மா பிரயாணி. இந்திரியங்கள் குதிரைகளுக்கு ஒப்பானவை. புத்தி சாரதி. மனமே கடிவாளம்'' என்கிறது, இந்துமத நூலாகிய பதஞ்சலியோக சூத்திரம். ஆஹா! இந்திரியங்களைக் கட்டுப்படுத்த புத்திக்குதவும் ஒரு கருவியே மனம் என்பதை இந்து மதம் எவ்வளவு தெளிவாக எடுத்துரைக்கிறது.

ஆனால் மனமாகிய இந்தக் கருவியின் வல்லமையோ அளப்பரியது. இக் கருவியை அடக்கி நம் வசப்படுத்தி விட்டால் அப்புறம் இவ்வுலகமே நம்முள் அடங்கும்; நமக்குக் கட்டுப்படும்; நம்வசமாகும்.

எனின் இம் மனத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி? அதைக் கூறும் மார்க்கமே இராஜயோகமாகும். இயமம், நியமம் ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் எட்டுப்படி நிலைகளைக் கொண்டுள்ள இவ் யோகமானது, மனத்தை படிப்படியாகக் கட்டுப்படுத்தி இறுதியில் மனமடங்கிய நிலையில், மனம், மொழி, மெய்களுக்கு எட்டாத பரவஸ்துவில் அடங்கிய வழிகளை எடுத்தியம்பிடுகிறது. ஆனால் இந்த இராஜயோகமானது இந்து மதத்திற்கே அதற்கு மட்டுமே உரியது. இவ்வழி, இந்துமதமானது மனத்தைப் புலன்களிற் பொருந்தாது தடுத்திட, அதாவது உள்ளத்தைச் சுருக்கிட வழிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

உலகம் என்பதற்கு இந்து மதம் அளித்திடும் விளக்கமே வேறு. அத்வைதியத்தை அத்திவாரமாகக் கொண்டுள்ள இந்து மதமானது உலகம் முழுவதும் ஒரே பொருளால் ஆனதே என்கிறது. மனமும் இதே பொருளாற்றான் ஆனது என்று கூறுகிறது. ஆகவே மனத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உலகத்தையே பூரணமாகக் கட்டுப்படுத்தலாமென்கிறது, இந்துமதம். இதனால் விஞ்ஞானத்தின் கற்பனைக்குமெட்டாத பல அரிய செயல்களைப் புரியலாமென்கிறது.

இவ்வண்ணம் உள்ளத்தைச் சுருக்கியோரே யோகியர். அதனாற்றான் அவர்களால் உள்ளத்தின் தன்மையறிந்து, உலகத்தை உள்ளபடி அறிந்து மதக் கரியைத் தன் வசமாக்கிக், கரடி வெண்புலி வாயைக் கட்டி, நீர்மேல் நடந்து, நெருப்பை விழுங்கி காற்றில் பறந்து இன்னும் பல அரிய சாதனைகளைப் புரிந்திடவும் முடிந்தது. அதுமட்டுமா? இவற்றின் முத்தாய்ப்பாக யாது மாகி நிற்கும் இறைவனை அடையவும் முடிந்தது.

பரம்பொருள் அறிவுமயமானது. அதை அடைந்திட்ட யோகியர் ஆத்மீகமாக மட்டுமின்றி இலௌகிகமாயும் உலகைப் பற்றி அறிந்திருந்தனர், அதனாற்றான் இவர்களால் சந்திரக்கிரகணத்தையும், சூரியக்கிரகணத்தையும் இன்னும் பல இயற்கையின் நிகழ்ச்சிகளையும் பற்றித் துல்லியமாக அறிந்து விவரிக்க முடிந்தது.

இவை மட்டுமா இந்து மதத்தின் பெருமைகள்! சொல்லப்புகின் அவை எண்ணிலடங்கா. மனத்தை அடக்கிட வழிகள் கூறும் இந்து மதம் அவரவர் தகுதிக்கேற்பவும் பற்பல வழிகளை அறிந்து கூறியிருக்கின்றது. ஆனந்தமான, அனந்தமான இவ்வழிகள் மூலம் உள்ளத்தைச் சுருக்கலாம் அதன் பயனாய் உலகத்தை அளக்கலாம்; அணிமா, லகிமா, கரிமா, முதலாம் அட்டமா சித்திகளையும் பெறலாம்; பரம் பொருளுடன் ஒன்றலாம்; முடிவில் பரமானந்த தேனைப் பருகலாம். அதிற்றிளைத்து அனைத்தையும் மறந்திடலாம்.

மா. திருவாசகர் 12 M

WITH COMPLIMENTS

FROM

# KLASSIC PARADISE

ELECTRONIC & TEXTILE CENTRE

**SPECIALISTS IN SAREES**

119, 119A MAIN STREET,
COLOMBO 11.

Phone : 548193
549919

Office : 23317
Residence : 030-3315

---

*WITH THE BEST COMPLIMENTS*

*FROM*

# GOODFARE ENTERPRISES

65, GALLE ROAD,
BAMBALAPITIYA.

T. Phone: 587369

<u>மத்திய பிரிவில் முதல் பரிசு பெற்ற கட்டுரை;</u>

# இந்து சமய நெறிமுறைகள் மனித வாழ்வை வளம் படுத்துகின்றன

இந்து சமயம்; இது அன்பால் இறைவனையடையும் வழிகளைக் கூறுமோர் அதியற்புத மதம். ''தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' என்று பாரதியாரால் வியந்து போற்றப்பட்ட நம் தேனினும் இனிய மொழி வேரும் விருதும் விட்டு வளர்வதற்கும் 'தமிழன் என்று சொல்லடா — தலைநிமிர்ந்து நில்லடா' என்று கூறி நாமின்று தலைநிமிர்ந்து நிற்பதற்கும் ஆதாரமாய் அமைந்த மதம் அது. கி.மு. 3000 ஆண்டளவில் சிந்து வெளியில் தோன்றி, இன்று சந்து பொந்து எங்கும் சிந்து பாடி வாழ்கிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் 'எம்மதமும் சம்மதமே' என்றும் பல அரிய தத்துவங்களின் ஊற்றுக்கண்ணாய் அமைந்துள்ள மதம் அது.

இந்து மதம் மனித குலத்தை வளப்படுத்துவது போல வேறெம்மதமும் வளம் படுத்துவதில்லை. வளப்படுத்துவதென்றால் வெறும் உள்ளத்தால் மட்டுமின்றி உடலாலும் வளம்படுத்துகின்றது. உள்ளத்தை வளப்படுத்தவெனக் கோயில்களும் ஆகமங்களும் வேதங்களும் உபநிடதங்களும் உள்ளன. உடலுக்குச் சுகந்தந்து பேண கற்பூரங்களும் தீர்த்தங்களும் உள்ளன.

இந்து மதத்தைப் பின்பற்றுபவன் உள்ளத்தை அடக்கி ஆளும் அபூர்வ ஆற்றலைப் பெறுகிறான். அவன் தன்னிலேயே இறைவன் குடியிருக்கக் காண்கிறான். இதையே திருமூலர்

உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

என்று பாடினார்.

கோயில் சந்நிதானத்தில் கொடியவரே குற்றஞ் செய்யத் தயங்கும் போது தன்னிலேயே இறைவனைக் காணும் இந்து மதத்தவன் கனவிலும் கொடிய காரியங்கள் செய்ய எண்ணான். இதன் காரணமாக அவனது வாழ்வு வளம்படுகிறது. உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள், நாளுக்கு மதிப்பேறும் பொன் போன்றவை. அவற்றை ஒரு முறை படிக்கும் கொலை பாதகன் கூடத் திருந்திவிடுவான். உண்மையையே பேசு, அன்னத்துக்கு மதிப்பளி போன்ற, முக்காலத்திலும் போன்றப்படக்கூடிய கருத்துக்கள் அக்காலத்திலேயே இந்து மதத்தில் வேரூன்றி விட்டன. இந்து மதம் பஞ்சமாபாதங்களாகக் கருதும் குற்றங்கள் நடைபெறாத உலகம் சொர்க்கமாகவே மாறிவிடும். இந்து மதத்திலே கூறப்படுவது போன்று தான தர்மங்கள் செய்யப்பட்டால் பசி, பஞ்சம், பட்டினி என்பவை உலகில் தாண்டவமாடமாட்டா. எதிரியை மன்னித்துவிடும் மனப்பாங்கு ஏற்பட்டால் உலகில் போர் ஏது? பகை ஏது? ஆபிரகாம் லிங்கன் கூட ஒரு முறை கூறினார், ''நான் என் எதிரிகளோடு நட்புப் பாராட்டுவது அவர்களை அழிக்கத்தான்! ஆமாம்; நான் என் எதிரியை நண்பனாக்கிக் கொள்ளும்போது என் எதிரி அழிந்து விடுகிறானே!'' இதுவும் இந்து மதத்திலே கூறப்பட்ட ஒரு கருத்துத்தான். யோசித்துப் பாருங்கள், இந்து மதம் எங்கெல்லாம் பரவிப் பரந்துள்ளது?

இனி, உடலை இந்துமதம் வழிப்படுத்துவது பற்றிய விடயத்துக்கு வருவோம். கோயில்களில் கற்பூரம் காட்டுவது பற்றி நாமெல்லோரும் அறிவோம். அக்கற்பூரம் அசுத்தமான வளியைச் சுத்தமாக்கி நமக்குதவுகின்றது. அத்துடன் கோயில் நந்தவனங்களிலுள்ள தாவரங்களும் வளியைச் சுத்தமாக்குவதுடன் சூழலுக்குப் பசுமையையும் நம் மனதுக்கு அமைதியையும் அளிக்கிறது. இறைவன் சந்நிதியில் யாவரும் சமமாக நிற்கிறோம். அங்கு வேறுபாடுகள் அகற்றப்படுகின்றன. மனவெழுச்சிகள் அடங்குகின்றன. கோயிலுக்குப் போக முன்னர் குளித்து உடலைச் சுத்தமாக்கிக்கொள்கின்றோம். சுத்தம் சுகம் தரும் அல்லவா? புலால் உண்ணற்க என்கிறது இந்து மதம். மிருகவதையைத் தடுப்பது மட்டுமன்று

*WITH THE BEST COMPLIMENTS*

*FROM*

# ASLAMS

## IMPORTERS / EXPORTERS

**Exporters of:**

- TEA
- DESICCATED COCONUT
- COPRA
- WOOD CHARCOAL
- SPICES

AND OTHER PRODUCES.

P. O. BOX 17
No. 33, TELANGAPATHA ROAD
WATTALA.
SRI LANKA.

Phone: 530230 / 530835 / 530872
Telex : 21772 ASLAM CE
22426 ASLAM CE
Cable: YASMIN / WATTALA.

இதன் நோக்கம். கொழுப்பு நமது உடலில் படிந்து இரத்த அழுத்தம் அதிகரிக்கக் கூடாது என்பதும் ஒரு நோக்கமே. வள்ளுவர் இதனைக் கூறும் போது,

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.'' என்கிறார்.

விரதங்களை வெறும் மூட நம்பிக்கையெனக் கூறுவதுண்டு. ஆனால் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் சமிபாட்டுறுப்புக்களுக்கு ஓர் அரிய நிகழ்ச்சி இது. நாம் நெற்றியில் பூசிக் கொள்ளும் சந்தனம் வெறும் அழகை மட்டுமின்றி, குளிர்ச்சியையும் தருகிறது. பருகும் தீர்த்தமானது, துளசி போன்ற பல மருந்து மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட சிறந்த கிருமி கொல்லியாக விளங்குகிறது. இப்படியே கூறக்கூறக் கூறிக்கொண்டே போகலாம்.

மேற்கூறியவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது மனித வாழ்வை வளம் படுத்தும் மதம் இந்துமதமே என்பது தெட்டத் தெளிவு. நாயிற் கடையாய் கிடந்த அடியாரைத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனாய் வந்து காப்பான் இறைவன். போற்றுவோரையும் தூற்றுவோரையும் சமனாய் எண்ணி இருசாரரையும் உய்யவைப்பான் அவன். ''ரோஜாவை வேறெந்நாமம் கொண்டழைத்தாலும் அதன் நறுமணம் மாறாது'' என ஷேக்ஸ்பியர் கூறியது போல நமது மதம் வேறு பல மதங்களிலும் வாழ்கிறது; வளர்கிறது. வாழ்க நம் இந்து மதம்; ஓங்குக அதன் புகழ்.

கோளிற் பொறியிற் குணமிலவே — எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

**ந. ஜனகன் 10 Q**

# பக்திக்கொரு சக்தி

சக்தி என்று சொல்லிட — இங்கு
திரண்டு வந்தது மாணவர் சக்தி
பக்தி அதனை உரைத்திட — இன்று
பாட்டு வந்தது கலைமகள் பற்றி
முத்தி கொண்டு சிறந்திட — இவர்
மனங்கள் கண்டது நிறை அமைதி
புத்தி வேண்டி தொழுதிட — இங்கு
இவர் ஒன்று சேர்ந்திட்ட புதிய சக்தி

கூட்டாக செய்வோம் நாம் பல பூஜை — இனி
சிட்டாக பறக்கும் மனச்சுமைகள் அனைத்தும்
கிட்டாத நிலைகள் எளிதில் கிட்டும் — அங்கு
மொட்டான ஆசைகள் ஒருநாள் மலரும்

கமல மலரின் கவிதை அரசி
நிமல மனத்தின் சார்ந்த சொரூபி — தேவி
பாத மலரை பணிந்த நம் கைகள் — அவள்
நாத சுருதியால் நன்மைபெற்றேறுங்கும்

சிறுத்த மனத்தை மாற்றும் உருவம்
பெருத்த சுமைகள் போக்கும் சொரூபம்
வருத்த எங்கள் வதன வடிவம்
பொறுத்த அவளின் பார்வையில் விடியும்— ஆம்
கசிந்து அவளை தொழுத பருவம்
கவலைகள் எல்லாம் பறக்கும் மருமம்...

**இ. நிரஞ்சனன்**

WITH BEST COMPLIMENTS

OF

# EQUITY SERVICES LTD.

4 TH FLOOR
67, DHARMAPALA MAWATHA
COLOMBO 7

T'phone : 549908 Cables : EQUISERV

---

With Best Compliments
of

# M. A. RAZAK & CO., LTD.

Shipping Agents, Charterers, Bunker & Freight Brokers, Travel & Tours

Head Office :
7, 19 th Lane (P. O. BOX 989)
COLOMBO-3.

Wharf Office :
29, I/II Gaffoor Building
Colombo-I.

Tele : 575405, 575404, 575651
(Night 596414)

Phone : 547873

Telex: 21296 A/B Marazak CE
Cable : Mazarak Colombo.

கீழ்ப்பிரிவில் முதல் பரிசுபெற்ற கட்டுரை:

# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

இளஞ் சிறுர்களே வருங்கால சமூகத்தை கட்டியெழுப்பும் மகா வீரர்கள். இவர்கள் நல்லவராக வாழ்ந்து நல்ல குணங்களைசிறு வயதில் பழக வேண்டும். இப்படிப் பட்டவர்களே வருங்கால சமூகத்தைக் கட்டியெழுப்பும் ஆணிவேர். இப்படி சிறுவர்களான எம்மை நல்வழிப்படுத்த பெற்ருேர்களும், பெரியோர்களும், ஆசிரியர்களும் உதவ வேண்டும். ஆனுல் இவர்கள் எல்லோரிலும் எமக்கு அதிகமாக உதவுவர்கள் பெற்ருேர்களே ஆவர். பெற்ருேர்கள் என்பவர்கள் பிள்ளைகளுக்கு பெரும் பணி செய்து நிற்பதனுல் உலகமே கண்ணியப்படுத்தும் உத்தமர்களாக அவர்கள் மதிக்கப்படுகிருர்கள். அவர்கள் தம் செல்வங்களுக்கு முன்பு அன்பின் வடிவமாக, அரவணைப்பின் கரங்களாக, பண்பின் சிகரமாக, பாசத்தின் பிறப்பிடமாக இருக்கின்றனர். நல்லதையும் தீயதையும் நமக்கெல்லாம் வேருவேருகப் பிரித்துச் சொல்லித் தருபவர்கள். அவர்கள் தம் செல்வங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தம் காசு, சொத்து, சுதந்திரங்களை மட்டுமல்லாது தமது விலைமதிப்பற்ற உயிரையும் கர்ப்பமாக கருதுபவர்கள்.

பத்து மாதம் சுமந்து பாலூட்டி, சீராட்டி கண்ணை இமை காப்பது போல் இரவு பகல் பாராது பாலூட்டி வளர்ப்பதில் தாய் பெரும் பங்கு எடுக்கிருள். அவர் அன்பு என்னும் நீரூற்றி, பண்பு நெறிபடுத்தி, அறிவு மலர் தூவி பெரும் பங்கு கொள்ளும் தாயின் தியாகம் அளவிட முடியாதது. தன் கண்ணை விளக்காக்கி, கையை தொட்டிலாக்கி, இரத்தத்தை பாலாக்கி வளர்க்கும் அன்னையின் தன்னலமற்றஅன்பு விலைமதிப்பற்றது. "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" "தாய் சொல்லைத் தட்டாதே" என்னும் முதியோர் வாக்குகள் தாயின் பெருமையை விளக்குகின்றன. ஆகவே நாம் எச்சந்தர்ப்பத்திலும் தாயின் கட்டளையை புறக்கணிக்கக்கூடாது. நாம் எம்மை விட வயதில் மூத்தோருக்கு கீழ்ப்படிந்து நல்லவனுக வாழ்ந்து ஈன்ற தாய்க்கு பெருமையை ஈட்டிக் கொடுக்க வேண்டும். இதனை திருவள்ளுவர் 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை சான்ருேன் எனக் கேட்ட தாய்" என்ற குரலில் அழகாக விளக்கி உள்ளார்.

தந்தையானர் உழைத்து எமக்கு உண்ணத்தந்து அறிவூட்டி சமுதாயத்தோடு ஒட்டி உறவாடி தன் மகனை உயர்ந்தவனுக வளர்ப்பதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்கிருர். இதனை திருவள்ளுவர்

"தந்தை மகற்காற்று நன்றியவைத்து
முந்தி இருக்கச் செயல்" என்று விளக்கி உள்ளார்.

ஆகவே எம்மை கல்வி அறிவுடையவனுக ஆக்கும் தந்தையின் கட்டளையை மதித்து கீழ்ப்படிவாக நடந்து அவரின் விருப்பத்தைப் பெற முயல வேண்டும். "தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை" ஆகவே தந்தையின் சொல்லை நாம் தட்டிக்கழிக்கக் கூடாது.

பெற்ருேரின் ஆசியை நாம் என்றென்றும் பெற்றுக்கொள்ள முயல வேண்டும். அவர்களின் ஆசியிலும் ஆதரவிலும் தான் ஒவ்வொரு பிள்ளையின் எதிர்காலத்தின் ஒளி மயமே தங்கியுள்ளது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஒளவை மூதாட்டியின் பொன்மொழிக்கு இணங்க நாம் எமது பெற்ருேர்களை இறைவனுக்கு அடுத்தபடியாக போற்றி மதிக்க வேண்டும். எம்மை கண்ணுங்கருத்துமாக நற்பண்புகளையும், அறிவையும் ஊட்டி வளர்த்த மாதா பிதாவுடன் அவர்களின் வயோதிப காலத்தில் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். அத்துடன் எம் பெற்ருேரை மகிழ்விக்க எல்லோரும் என்னை நல்லவன் என்று கருத வாழ வேண்டும். இதை வள்ளுவர்

"மகன் றந்தைக் காற்றுமுதவி யிவன்தந்தை
யென்ருேற்றுன் கொல்லெனுஞ் சொல்"

என்ற குறளின் மூலம் அழகாக எடுத்துறைத்துள்ளார்.

அ. நவீந்திரன் Year 7Q.

*WITH THE BEST COMPLIMENTS*

*OF*

# SAMACON LIMITED

## ENGINEERS & CONSTRUCTORS

**31 A, 10TH LANE**
**(off Schofield Place)**
**COLOMBO 3.**

**TELEPHONE : 580511**

# செந்தமிழ் பொய்கையில் சிந்திய இந்து மதம்

செந்தமிழும் சைவமும் தழைக்கும் இடமெல்லாம் சுடர்விட்டுப் பரந்து ஓங்கிய பொய்கையினூடே தவழ்ந்து வரும் குளிர்ந்த இளம் தென்றலாகிய இந்து மதம் மக்களின் வாழ்வில் வளம்குறையா கருத்துக்களையும் தரம் குறையாத் தங்கநிகர் எண்ணங்களையும் இத்தரணிக்குத் தந்து உதவி உள்ளது என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இத் தரணியில் சிறுபான்மையினர் இந்து மதத்தில் இருந்த போதும், தனிப் பெருஞ் சிறப்பு யாதெனில், இத்தரணியில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் தமிழ் பேசும் இந்து மத மக்கள் ஆலமர விருட்சம் போல் வேர் ஊன்றிப் பல்கிப்பெருகி, ஊற்றெடுத்த வண்ணம் திகழ் கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

''பைந்தமிழ் காவியத்தில் சிந்திய சிலம்பின் முத்துக்கள் போல்
செந்தமிழ்ப் பொய்கையில் சிந்திய இந்து மதம்
வண்டமிழ் கமலத்தின் இலையில் சிதறிய நீர்த்துளி போல்
சொற்றமிழ் உலகில் சிதறிப்பரந்திருக்கும் நற்றமிழ் இந்து மதம்''

ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியான இறைவனைப் போன்றே எங்கள் சமய நெறியின் தொன்மையும் சிறப்பும் விளங்குகின்றன. எங்கள் சமய நெறியின் தொன்மையைக் கால வரையறைக்குள் அடக்கிவிட முடியாது. இது இந்து மதத்திற்குரிய தனிச்சிறப்புக்களில் ஒன்றாகும்.

எங்கள் சமய வாழ்விலே தேவார திருவாசகங்கள் பிரிக்க முடியாதவாறு ஒன்றிக் கலந்துள்ளன. இதையே ஈழத்துப் பெரியாராகிய செந்தி நாதையர் 'தேவாரம் வேதசாரம்' என்பார். அதாவது தேவாரத்தினை நாம் 'தமிழ் வேதம்' என்று போற்றுகிறோம் வேதம் "ஓம்" என்ற பிரணவத்துடன் ஆரம்பிக்கின்றது. 'ஓம்' என்ற எழுத்தின் பெரும் பகுதியான "ஓ" என்ற உயிரெழுத்துடன்'த்' என்ற மெய்யினைக் கலந்து 'தோடு' என்றே தமிழ் வேதமும் ஆரம்பமாகின்றது. இதைத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார்.

அகர முதல எழுத் தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'

அதாவது எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அது போல உலகம் இறைவனை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

எமது மதமாகிய இந்து மதம் சொல்கின்றது வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கருத்தை எடுத்துக் கொள்வோமாயின் சிறிது நேரம் நாம் வாழ்ந்த வாழ்க்கையின் பல கட்டங்களை எண்ணிப் பார்க்கும் போது இறுதி முடிவாக சிற்றின்ப வாழ்க்கை பயத்தை ஏற்படுத்துகின்றது, என்ற முடிவுக்கு வரலாம். ஆனால் பேரின்ப வாழ்க்கை வாழ்பவர்களுக்கு அதாவது முற்றிலும் துறந்த துறவிகளுக்கு வாழ்க்கையில் பயமே ஏற்படாது. இதையே சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறுகின்றார்.

இன்பத்தில் இருப்பது நோயின் பயம்;
